# சார்பு நீதிமன்றம், கோவில்பட்டி.

**அ.வ எண்: 199/2019 கமலம் (வாசா1) தேதி: 04.09.2024**

**வாசா. 1 மீண்டும் ஆஜர். சத்திய பிரமாணத்தின் பெயரில் 1,3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

சங்கரலிங்கம் என்பவர் எனக்கு எனது தந்தைவழி பூட்டன் ஆவார். வழக்குச்சொத்து மேற்படி சங்கரலிங்கத்திற்கு பாத்தியப்பட்டது என்பதற்கு எந்த ஒரு ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சங்கரலிங்கம் இறந்ததேதியை காட்டக்கூடிய இறப்புச் சான்றிதழ், அவரது வாரிசு சான்றிதழ் இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. சங்கரலிங்கத்திற்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை அழகன் , ராமன், இருவரும் எந்த தேதியில் , யார் முன்னிலையில் சொத்துக்களை பாகம் பிரித்துக்கொண்டனர் என்ற விவரத்தை நான் பிராதில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. வழக்குச்சொத்தின் 4 மால் விவரம் பிராதில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து தவிர சங்கரலிங்கத்திற்கு வேறு சொத்துக்கள் இருந்ததாக பிராதில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. அழகன் , ராமன், ஆகியோர்களுக்கு தாவா சொத்தில் உரிமை இருப்பதை காட்டக்கூடிய அடங்கல், பட்டா, தீர்வை ரசீது, சாகுபடி அடங்கல் வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி:** பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது.

(ஒம்) D. மாரிக்காளை, B.Sc.,M.L.,
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.